1973 நவம்பர் 26]

Tiruttani as industrially backward area

* 402 Q.—Thiru A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal under the consideration of the Government to request the Government of India to declare Tiruttani taluk in Chingleput district as an "Industrially Backward Area"?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவரவர்களே, தமிழகத்திலே உள்ள சில பகுதிகளைப் பின்தங்கிய பகுதிகளாக முதலில் அறிவித்தார்கள். அதன் பிறகு வடாற்காடு மாவட்டத்தில் ராணிப்பேட்டை போன்ற இடங்களைப் பின்தங்கிய பகுதிகளாக அறிவித்தார்கள். மீண்டும் தொழில் துறையில் பின்தங்கிய சில பகுதிகளைத் தேர்ந்தெடுத்து திருத்தணியையும் அதில் சேர்த்து அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : திட்டக் குழுவால் அறிவிக்கப் பட்ட 8 மாவட்டங்களைப் பின்தங்கிய பகுதிகளாக அறிவித்திருக்கிறோம். இந்த எட்டிலே செங்கற்பட்டு மாவட்டம் வரவில்லை. இந்த எட்டிலேயும் சில மாவட்டங்களிலேதான் 15 சதவிகிதம் உதவித் தொகையை மத்திய அரசு வழங்கியிருக்கிறது. இந்த உதவித் தொகை வழங்காதப் பகுதிகளாகத் தேர்ந்தெடுத்துள்ள பின்தங்கிய மாவட்டங்களிலும் செங்கற்பட்டு வரவில்லை.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, 'இன்டஸ்டிரியலி பாக்வொர்டு ஏரியாஸ்' என்று டிக்ளேர் செய்யும்போது தொழில் துறையில் மிகவும் பின்தங்கியப் பகுதியாக இருக்கக்கூடிய இடங்களை யெல்லாம் சேர்த்து அறிவிப்பார்களா? முன்பு வாலாஜாவோடு ஆர்க்காடு சேர்ந்திருந்தபோது பின்தங்கியப் பகுதியாக அறிவித்திருந்தார்கள். ஆனால் ஆர்க்காடு பிரிந்துவிட்ட பின்னால் அது பாக்வொர்டு லிஸ்டில் இல்லை. ஆகவே, வடாற்காடு மாவட்டத்திலுள்ள செய்யார் போன்ற இடங்களை மீண்டும் இண்டஸ்டிரியலி பாக்வேர்டு ஏரியாவில் சேர்த்துக்கொள்ள அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்தக் கோரிக்கையை மத்திய அரசுக்கு எழுத முடிவு செய்திருக்கிறோம்.

[1973 நவம்பர் 26

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, தொழில் துறையில் பின்தங்கிய மாவட்டம் என்று எந்த எந்த அடிப்படைகளில் அறிவிக்கப்படுகிறது? தொழில் துறையே இல்லாத பிரதேசத்தை பின்தங்கிய பிரதேசமாக அறிவிக்க வேண்டுமென்று சொன்னல், கன்னியாகுமரி மாவட்டத்தை பின்தங்கிய மாவட்டமாக அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கன்னியாகுமரி பின்தங்கிய மாவட்டமாகத்தான் இருக்கிறது. பின்தங்கிய பகுதிகளாக அறிவிப்பதற்கு மத்திய அரசு தெரிவித்திருக்கிற சில பகுதிகள் :—

(1) Per capita foodgrains/commercial crops production depending on whether the district is predominently a producer of foodgrains/cash crops.

(2) Ratio of population to agricultural workers.

(3) Per capita industrial output.

(4) Number of factory employees per lakh of population or alternatively number of persons engaged in secondary or tertiary activities per lakh of population.

(5) Per capita consumption of electricity.

(6) Length of surfaced roads in relation to population or railway mileage in relation to population.

திரு. எஸ். வடிவேல் : தலைவரவர்களே, எட்டு மாவட்டங்கள் பின்தங்கிய மாவட்டங்கள் என்று சொன்னுர்கள். அவை எந்தெந்த மாவட்டங்கள்? தஞ்சை மாவட்டத்தில் கடலோரப் பகுதிகளை பின்தங்கியப் பகுதிகளாக சேர்த்துக் கொள்ள அரசு முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பின்தங்கிய மாவட்டங்களில் தஞ்சை மாவட்டமும் இப்போதே சேர்க்கப்பட்டிருக்கிறது. தென்ஞற்காடு, மதுரை, இராமநாதபுரம், கன்னியாகுமரி, வடாற்காடு, தர்மபுரி, திருச்சி, தஞ்சை ஆகிய எட்டு மாவட்டங்கள் பின்தங்கிய மாவட்டங்களாக அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இந்த 8 மாவட்டங்களில் சில பகுதிகளை மட்டும் தேர்ந்தெடுத்து, அந்தப் பகுதிகளுக்கு 15 சதவிகிதம் சப்சிடியாகக் கொடுக்கிறது மத்திய அரசு. தற்போது மூன்று மாவட்டங்களில் அந்த சப்சிடி திட்டம் இருக்கிறது. ஆனல் மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும்

1973 நவம்பர் 26]

குறிப்பிடுவது அந்த சப்சிடித் திட்டத்தைப் பற்றித்தான் என்று நான் கருதுகிறேன். மத்திய அரசு மூன்று மாவட்டங்களுக்கு இந்த சப்சிடி திட்டம் என்று தெரிவித்தார்கள். ஆனல் மிகவும் பின் தங்கிய பல இடங்களுக்கு அது கிடைக்க வேண்டுமென்று கருதி, நாங்கள் பல ட்ராக்டுகளாகப் பிரித்து, கிட்டத்தட்ட 6 மாவட்டங்களுக்கு இந்த சப்சிடி கிடைக்கும்படி செய்திருக்கிறோம்.

திரு. கே. என். குமாரசாமி : இந்த 8 பின்தங்கிய மாவட்டங்களிலே தொழில் அபிவிருத்தி செய்வதற்கு நம்முடைய அரசாங்கம் ஏதாவது முயற்சி மேற்கொண்டிருக்கிறதா ? தொழில்துறையில் இருக்கின்ற தனிப்பட்டவர்களுக்கு இந்த மாவட்டங்களில் தொழில் அபிவிருத்தி செய்வதற்கு வசதி செய்து கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போதே ஏராளமாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, 15 சத விகிதம் சப்சிடி கிடைக்கக்கூடிய தொழில்கள் பெருகி வருகின்றன. அவை பெரும்பாலும் சென்னையை ஒட்டித்தான் தொடங்கப்படுகின்றன. காரணம் இங்கேதான் அதற்கான வாய்ப்பும் வசதியும் இருப்பதாக மக்கள் கருதுகிறார்கள். (வடாற்காடு மாவட்டத்தில் ராணிப்பேட்டையில் தொழில் பெருகுவதற்கான வாய்ப்புகள் தற்போது அதிகரித்து வருகின்றன. அதைப்போலத்தான் தர்மபுரியிலும் சூழ்நிலை இருக்கிறது. இருந்தபோதிலும் சென்னையிலிருந்து தூரத்திலுள்ள இடங்களில் தொழில்களைத் தொடங்க தயக்கம் காட்டுகிறார்கள்.

திரு. எஸ். ஆறுமுகம் : தலைவரவர்களே, சேலம் மாவட்டத்தில் ஓமலூர் வட்டம் மிகவும் பின்தங்கிய பகுதியாக இருக்கிறது. ஆனல் அது பின்தங்கிய பகுதிகளாக அறிவிக்கப்பட்டதில் இடம் பெறவில்லை. மேலும் சேலம் மாவட்டத்தை பின்தங்கிய பகுதிகளில் சேர்க்கப்படாததற்கான காரணம் என்ன என்பதை அறிய ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பின்தங்கிய மாவட்டங்களாக அறிவிக்கப்பட்ட 8 மாவட்டங்களிலே சேலம் மாவட்டம் இடம் பெறவில்லை. வளர்ந்துவரும் மாவட்டங்களில் சேலம் முதலிடத்தைப் பெறுகிறது. ஒரு பெரிய தொழில் பேட்டையாக மாறக்கூடிய வாய்ப்புகளும் வசதிகளும் சேலத்தில் இருக்கின்றன.

திரு. கே. எ. வகாப்: வடாற்காடு மாவட்டம் பின்தங்கிய மாவட்டமாக இருந்தாலும் ஒரு சிறு தொழில்கூட அங்கே உருவாக வசதியில்லாமல் இருக்கிறது. ஆகவே, செய்யார், வந்தவாசி, போளூர் போன்ற இடங்களில் 15 சதவிகிதம் சப்சிடி ஸ்கீமில் தொழில்களைத் தொடங்கினால் அங்கே தொழில் பெருக வாய்ப்பு ஏற்படும். அதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: வடாற்காடு மாவட்டத்தில் சில பகுதிகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

திரு. த. சோனையா: தலைவரவர்களே, தொழில் துறையில் மிகவும் பின்தங்கிய பகுதிகள் என்று அறிவித்த பின்னால், அப்படிப் பட்ட பகுதிகளிலேயே தொழில்கள் பெருகுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். அதற்குச் சலுகைகள் காட்ட வேண்டும். அப்படிச் செய்தால் சென்னை போன்ற பகுதிகளிலே தொழில்கள் குவிவதற்கு வாய்ப்பு இருக்காது. இப்போது சென்னையிலே தொழில்கள் குவிவதால், 300 மைல் தூரத்திலே இருக்கிற இராமநாதபுரம் மாவட்டத்தில் தொழில் தொடங்க யாரும் முன்வரமாட்டேன் என்கிறார்கள். ஆகவே, இப்படிப்பட்ட இடங்களுக்கு விசேஷ சலுகைகள் அளிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அங்கத்தினர் அவர்களுடைய கோரிக்கையைப்பற்றி கவலைப்பட வேண்டாம். மதுரையிலிருந்து 10 மைல் தூரத்தில் தான் அவர்களுடைய தொகுதி இருக்கிறது. அந்தப் பகுதியில்தான் அதிகமாக தொழில்கள் தொடங்க அரசு முயற்சி செய்து வருகிறது.

திரு. கு. அ. பொம்மன்: அமைச்சரவர்கள் அறிவித்த எட்டு மாவட்டங்களிலே நீலகிரி மாவட்டம் சேரவில்லை. அது ரொம்ப பின்தங்கிய மாவட்டமாக இருப்பதால் அதையும் பின்தங்கிய மாவட்டமாகச் சேர்க்க இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு சிபாரிசு செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நீலகிரி மாவட்டத்தில் தேயிலைத் தோட்டத் தொழிற்சாலைகள் நிறைந்திருப்பதை கனம் அங்கத்தினர் அவர்கள் மறந்துவிட்டார்கள் என்று நினைக்கிறேன். பொதுவாக சில பகுதிகள் 'பாக்கெட்ஸ் இன் தி டிஸ்டிரிக்ட்ஸ்' ஆக இருக்கின்றன. இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களை

1973 நவம்பர் 26]

எடுத்துக் கொண்டால் கோவில்பட்டி மிகவும் பின்தங்கிய பகுதியாக இருக்கிறது. ஆனால் திருநெல்வேலி பின்தங்கிய மாவட்டமாக சேர்க்கப்படவில்லை. ஆகவே, நம்முடைய அரசாங்கம் இப்படிப்பட்ட மிகவும் வறட்சியான இடங்களைத் தேர்ந்தெடுத்து, உதவியளிக்க முன்வந்திருக்கிறது. நம்முடைய யோசனை ஏற்றுக் கொள்ளப்பட்டால் இப்படிப்பட்ட பிரச்சனைகள் தீரும்.

திரு. அ. தேவேந்திரன் : தஞ்சை மாவட்டம் தொழில் துறையில் மிகவும் பின்தங்கிய பகுதியாக இருக்கிறது. குறிப்பாக கீழ்த் தஞ்சை மாவட்டம் மிகவும் பின்தங்கியிருக்கிறது. ஆகவே, கீழ் தஞ்சையில் 15 சதவிகிதம் சப்சிடி என்பதை மாற்றி 50 சதவிகிதம் சப்சிடி கொடுக்க வேண்டுமென்று நம்முடைய அரசு மத்திய அரசை கேட்டுக்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : 15 சதவிகிதத்தை 50 சதவிகிதமாக உயர்த்துவது என்பது முடியாது. மத்திய அரசு தெரிவித்துள்ள 15 சதவிகித சப்சிடி தஞ்சை மாவட்டத்திற்கு இப்போது இல்லை என்ற உண்மையை நான் ஒப்புக்கொள்கிறேன். பின்னாலே ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் இடங்களைத் தேர்ந்தெடுக்கும் போது தஞ்சை மாவட்டத்தின் சில பகுதிகள் பற்றியும் பரிசீலனை செய்யலாம்.

திரு. எம். சுரேந்திரன் : சார், தொழில்கள் ஒரே இடத்தில் குவிவது, நல்லதல்ல என்ற கருத்தையும், தொழில்கள் பரவலாக்கப்பட வேண்டுமென்ற கருத்தையும் இந்த அரசு ஒப்புக்கொண்டிருக்கிறது. ஆகவே, மத்திய அரசாங்கம் 15 சதவிகிதம் சப்சிடி அளித்து தொழில்களை ஊக்குவிப்பது ஒருபுறம் இருந்தாலும், எந்த எந்த இடங்கள் மிகவும் பிற்பட்ட இடங்களாக இருக்கின்றன என்று அறிந்து, அந்த இடங்களில் தொழில்களைப் பெருக்க மாநில அரசாங்கம் தனியாக உதவி செய்து தொழில்களைப் பெருக்க முன்வருமா ? ஒரே இடத்தில் தொழில்கள் குவிவதை தடைசெய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ? அரசாங்கம் எந்தெந்த வழிகளில் தொழில் பெருக்கத்திற்கு உதவி செய்கிறது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தடை செய்வது என்றால் பெரும் அபாயம் ஏற்பட்டுவிடும். கனம் அங்கத்தினர் அவர்கள் மேட்டூர் தொகுதியைச் சேர்ந்தவர்கள். அங்கே பல தொழில்கள்

குவிந்திருக்கின்றன. தொழில்கள் குவிவதை தடை செய்வது என்றால் அவர்களுக்கே அது சங்கடமாக இருக்கும்; தொழில் வளர்ச்சிக்கும் பாதகம் ஏற்படும்.

அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், விற்பனை வரியில் சலுகை கொடுக்கிறோம். மின்சார கட்டணத்தில் சலுகை கொடுக்கிறோம். 'வாட்டர் ராயல்டீஸ்'—இதிலே சலுகை கொடுக்கிறோம். நிலம் வழங்குவதில் சலுகை கொடுக்கிறோம். மத்திய அரசின் கீழுள்ள 'ஃபைனான்சிங் இன்ஸ்டிடியூஷன்'களிலிருந்து குறைந்த வட்டியில் கடன் கொடுக்கிறார்கள். இப்படிப்பட்ட உதவிகள் இந்த 8 மாவட்டங்களுக்கும் உண்டு.

திரு. எஸ். ஆறுமுகம்: தலைவர் அவர்களே, ஏற்கனவே ஓமலூர் வட்டம் மிகவும் பின்தங்கிய பகுதியாக இருக்கிறது. அது ப்ராஜெக்ட் பகுதியாகவும் இருந்தது. இப்போது அமைச்சர் அவர்கள் பதிலில் அது விடப்பட்டிருப்பதுபோல் இருக்கிறதே, அதற்குக் காரணம் என்ன? சேலம் மாவட்டமே மிகவும் பின்தங்கிய பகுதி, அதிலும் ஓமலூர் பகுதி மிகவும் பின்தங்கியதாக இருப்பதனால் இந்த மாவட்டப் பகுதிகளையும் சேர்த்து அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நான் சொன்னது மாவட்ட அளவில்தான். ஒவ்வொரு மாவட்டத்திலும் மிகவும் பின்தங்கிய பகுதியிருப்பது உண்மை. நான் ஆர்.ஐ. ப்ராஜெக்ட் பற்றிச் சொல்லவில்லை. அந்த மாவட்டமே முழுவதும் சேர்க்க வேண்டும் என்றுதான் நாங்கள் சொல்கிறோம். இப்போதும் ஓமலூர் பகுதி ஆர்.ஐ. ப்ராஜெக்டுக்குள்தான் இருக்கிறது. அதை எடுப்பதற்கு யோசனை இல்லை.

THIRU K. M. SUBRAMANIAM: Is it a fact that Royal Enfield has opened a factory in the Ramanathapuram district and whether they are entitled to 15 per cent subsidy that is given to the backward areas and also whether there are proposals to start 30 subsidiary industries connected with the one started by Royal Enfield?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இராமநாதபுரம் கீழ் பகுதியைப் பொறுத்தவரை முன்பு 10 சதவிகிதம்தான் இருந்தது. அந்த 10 சதவிகிதம் கொடுக்க வேண்டுமென்று சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது.

1973 நவம்பர் 26]

திரு. கா. வேழவேந்தன் : அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது மாவட்ட அளவில் இல்லாமல் பின்தங்கிய பகுதி என்பதாக வட்ட அளவில் பார்க்க வேண்டுமென்று சொல்லியிருப்பது மகிழ்ச்சி அளிக்கக்கூடியதாக இருக்கிறது. இந்த அடிப்படையில் மிகவும் பின்தங்கிய திருத்தணி, பொன்னேரி வட்டத்தையும் அதில் சேர்க்க அறிவிப்புச் செய்வார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது செங்கல்பட்டு மாவட்ட உறுப்பினருடைய நீண்டநாள் குறை, கோரிக்கையாகும். அதில் உண்மை இருப்பதாகவே அறிகிறோம். என்றாலும் செங்கல்பட்டு மாவட்டம் என்பதாக சென்னையைச் சுற்றியுள்ள பகுதியில் தொழில்துறை வளர்ச்சி மிகவும் இருப்பதால் அவை இந்தத் திட்டத்திற்குள் வரவில்லை. எனினும் திருத்தணி பகுதி, இன்னும் உறுப்பினர் ராஜகோபால் பகுதி பிற்பட்டவையாக இருக்கத்தான் செய்கின்றன.

திருச்சிராப்பள்ளி மாவட்ட நூற்பாலையில் நெசவுப்பகுதி

*** 403 வினா—திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அறவாக்குறிச்சி தொகுதியிலுள்ள திருச்சிராப்பள்ளி மாவட்ட கூட்டுறவு நூற்பாலையில் நெசவுப்பகுதி (weaving) -யையும் ஏற்படுத்தும் திட்டம் ஏதேனும் ஆய்விலுள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவர் அவர்களே, அறவாக்குறிச்சி மிகவும் பிற்பட்ட பகுதி, அங்கே உள்ள ஒரே ஒரு ஆலை, அதுதான். அதில் மேலும் வேலைவாய்ப்புத்தர வசதி அளிக்கிற வகையில், கொஞ்சம் இரக்கத்துடன் அதில் நெசவுத் தொழிலையும் இணைக்க மறுபரிசிலனை செய்வார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்த நூற்பாலையில் 12,500 ஸ்பிண்டில்கள் இருக்கின்றன. அவற்றை 25 ஆயிரம் ஆக்க வழி வகுத்திருக்கிறோம். அந்த ஆலையில் நெசவுத் தொழிலைக் கொண்டு வருவது கூட்டுறவுக்கே விரோதமானதாகும். காரணம் கைத்தறி நெசவாளர்களுக்கு நூல் உற்பத்தி செய்து கொடுப்பதற்காகவே